# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • ஜூன் 15, 2019

Weekly E-paper • JUNE 15, 2019




## சொல்லுங்கள் ரஞ்சித்- நீங்கள் யார்?

சுப. வீரபாண்டியன்



### புதுவையில் பொதுக்குழு

### குரங்குச் சேட்டை

தலையங்கம்



### கல்விக்கொள்கை ஒருநேர்காணல்

மா. உதயகுமார்

கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2050 ● ஜூன் 15, 2019 Weekly E-paper ● JUNE 15, 2019

# சொல்லுங்கள் ரஞ்சித் நீங்கள் யார்?

திரைப்பட இயக்குனர் பா. ரஞ்சித் - தானுண்டு, தன் வேலையுண்டு என்று திரைப்படங்களை மட்டும் இயக்கிக் கொண்டு, தனக்குக் கிடைத்துள்ள புகழைப் பணமாக்கிக் கொண்டு வாழும் தன்னலவாதியில்லை. சமூகச் சிந்தனையோடு பல நேரங்களில் குரல் கொடுப்பவர். அதுவும் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக, வெளிப்படையாக வெளியில் வந்து தன் கருத்துகளை வெளியிடும் போர்க்குணமுடையவர். தன் படத்தில் வரும் வில்லனை ஒரு இராம பக்தனாகக் காட்டக்கூடிய அளவிற்குத் துணிச்சல் உள்ளவர். படங்களை இயக்குவதோடு நின்றுவிடாமல், 'பரியேறும் பெருமாள்' போன்ற தரமான படங்களைத் தந்திருக்கும் தயாரிப்பாளர்.

சமூகநீதிக் கோட்பாட்டில் ஈடுபாடு உடையவர்கள், இயக்குனர் ரஞ்சித்தைப் பாராட்டுவதற்கு இவற்றை விட வேறு தகுதிகள் என்ன வேண்டும்? ஆதலால் நம் போன்றவர்களால் பாராட்டப்படக் கூடியவரே பா. ரஞ்சித்.

எனினும், சில வேளைகளில் அவர் நடந்துகொள்ளும் முறைகள், அவர் வெளியிடும் முரண்பட்ட கருத்துகள், ஒரு பெரிய சிக்கல் சமூக அரங்கில் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில், அவர் இன்னொரு விவாதத்தை முன்னெடுத்து, அடிப்படைச் சிக்கலைத் திசை திருப்பிவிடும் விதம் ஆகியன, அவர் யார் என்னும் பெரிய வினா ஒன்றையும் நம்முள் எழுப்புகிறது. முற்போக்காளர்களை அவர் எதிர்ப்பதும், முற்போக்காளர்களான பொதுவுடைமைக் கட்சி நண்பர்கள் அவரை ஆதரிப்பதும் நமக்குத் புரியாத புதிராக உள்ளது. ஒருவேளை, அவர் பேச்சில் உள்ள நல்ல பகுதிகளை மட்டும் அவர்கள் ஆதரிக்கிறார்கள் போலும் என்று நாம் கருத வேண்டியுள்ளது.

அண்மையில் திருப்பனந்தாளில் அவர் ஆற்றியுள்ள உரையின் அடிப்படையில்தான், மேலே உள்ள முன்னுரை தேவையானதாக

● சுப. வீரபாண்டியன்



ஆகிவிட்டது. அந்த உரையில் மூன்று பகுதிகள் உள்ளன. ஒன்று, ராஜராஜ சோழனைப் பற்றியது. இன்னொன்று, தலித் மக்களின் நிலங்கள் பறிக்கப்பட்டது தொடர்பானது, மூன்றாவது, நீதிக்கட்சிக்கும், முற்போக்காளர்களுக்கும் எதிரானது.

ராஜராஜ சோழன் பற்றிய அவர் கருத்து குறித்தே இப்போது பல விவாதங்கள் நடந்து வருகின்றன. சோழ மன்னன் பற்றிய அவர் கருத்து ஒன்றும் புதிதில்லை. வரலாற்று நூல்களிலேயே அம்மன்னனைப் பற்றிய இருவேறு கருத்துகளும் பதிவாகி உள்ளன. குறிப்பாக, சோழர் வரலாறு பற்றிய ஆய்வுகளை நடத்தியுள்ள, கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, தி.வை. சதாசிவப் பண்டாரத்தார், முனைவர் ஆ. பத்மாவதி ஆகியோரும், புகழ்பெற்ற வரலாற்று ஆசிரியர் கே.கே.பிள்ளை போன்றவர்களும் சோழர்கள் பற்றிய பல வரலாற்றுக் குறிப்புகளை, அம்மன்னர் காலத்துச் செப்பேடுகள், கல்வெட்டுகள், மெய்க்கீர்த்திகள் ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்டு பதிவு செய்துள்ளனர். கவிஞர் இன்குலாப் போன்ற சிந்தனையாளர்களும், ராஜராஜ சோழனின் ஆட்சிமுறைக்கு எதிரான தங்கள் கருத்தை வெளிப்படையாக எழுதியுள்ளனர்.

தான் ஆட்சிக்கு வந்த மூன்றாம் ஆண்டே, "காந்தளூர்ச் சாலைக் கலமறுத்து" வெற்றிகொண்ட ராஜராஜன், தொடர்ந்து பல போர்க்களங்களைக் கண்டதும் வென்றதும், மன்னனின் வீரத்திற்கும், நாடு பிடிக்கும் மன்னர்களின் பொதுவான போக்கிற்கும் சான்றுகளாக உள்ளன. நில அளவை (land survey), முறையைக் கொண்டுவந்ததும், சுற்று வட்டாரத்தில் மலைகளே இல்லாதபோது, 216 அடி உயரக் கோபுரத்தைக் கட்டியதும், புலிக்கொடியைக் கடல்கடந்து பறக்கவிட்டதும் அம்மன்னனின் புகழுக்கு காரணங்கள் ஆயின. அதே வேளையில், பார்ப்பனர்களுக்கு இறையிலி (வரியில்லாத) நிலங்களை வழங்கியதும், பொட்டுக் கட்டும் பழக்கத்திற்கு ஆதரவாக தேவதாசி முறையை ஊக்குவித்ததும் அவர் பற்றிய விமர்சனங்களுக்குக் காரணங்களாயின.

வரலாற்றை ஆராய்வதும் விமர்சனம் செய்வதும் எல்லோருக்கும் உள்ள உரிமை. ஆய்வுக்கு அப்பாற்பட்டவர்கள் எவருமில்லை. ஆனால் ரஞ்சித் விமர்சனம் அல்லது அவதூறு செய்துவிட்டாரென்று ஒரு காவல் நிலைய ஆய்வாளர், தானே முன்வந்து வழக்குப் பதிவு செய்வதும், இந்துத்துவக் கட்சிகள் சிலவும் அவர் மீது வழக்குப் பதிவு செய்வதும் விந்தையானவை.

வழக்குகளைத் தாண்டி, மிக இழிவான சாதிய அவதூறுகளும், வெளிப்படையான மிரட்டல்களும் சமூக வலைத்தளங்களில் உலா வருகின்றன. இயக்குனர் ரஞ்சித் பறையர் இல்லை, சக்கிலியர் வகுப்பைச் சேர்ந்தவர் என்று ஒருவர் ரத்தப் பரிசோதனை செய்து கண்டுபிடித்துத் தன் காணொளியில் பதிவிட்டு, அருந்ததியர் சமூகத்தையே தரக்குறைவாகப் பேசுகின்றார். ரஞ்சித்தின் நாக்கை அறுத்துவிடுவேன் என்கிறார். அவர் வேளாளர் குலத்து

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

## .. முன்பக்கத் தொடர்ச்சி

வேந்தராம். அவர் மீது இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

வழக்கம்போல், ஹெச்.ராஜா துள்ளிக்குதித்து வெளியில் வந்து ரஞ்சித்தை தச் சாடியிருக்கிறார். இன்னொரு அம்மையார், ரஞ்சித்துக்கு வரலாற்று அறிவே இல்லை, சங்க கால மன்னனான ராஜராஜ சோழன் (?) பற்றிப் பேச இவருக்கு என்ன தகுதி இருக்கிறது என்று கேட்கிறார். அந்த அம்மையாரின் வரலாற்று அறிவை எண்ணி நம்மால் வியக்காமல் இருக்க முடியவில்லை!

இவைபோன்ற மிரட்டல்களை, மத வெறியர்களின் தாக்குதல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். ரஞ்சித்துக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கின்றோம். பழைய வரலாற்றை விமர்சனம் செய்யும் உரிமை எல்லோருக்கும் உள்ளது என்பதை எடுத்துக் கூறுகின்றோம்.

ஆனால் ரஞ்சித்தோ, நம்மைத்தான் தாக்குகிறார். பார்ப்பனர்களை எதிர்ப்பது தலித் ஆதரவாகாது என்கிறார். நீதிக்கட்சி தலித்துகளுக்கு எதிரானது என்கிறார். அது மட்டுமல்லாமல், தன்னை எதிர்க்கும் பார்ப்பனர்கள் நேர்மையான எதிரிகள் என்றும், இடையில் இருக்கும் 'முற்போக்காளர்களைத்தான்' நாம் முதலில் எதிர்க்க வேண்டும் என்றும் கூறுகின்றார். அவருக்கு ஆதரவாக வெளியாகியுள்ள ஒரு காணொளியோ, சூத்திரர்கள் தங்களிடமிருந்து பறித்துக்கொண்ட நிலங்களை மீட்க வேண்டும் என்கிறது.

நீதிக்கட்சி தலித்துகளுக்கு எதிரானது என்பதற்கு ரஞ்சித் தரும் சான்று என்ன? தன்னிடம் வேலைபார்த்த ஒருவர், நீதிக்கட்சிக்கு வாக்களிக்காததால், அந்த தலித் பணியாளை வேலையிலிருந்து நீக்கி விட்டாராம். எனவே, நீதிக்கட்சி தலித்துகளுக்கு எதிரானதாம். அந்த நிகழ்ச்சி உண்மையானதாகவே இருக்கட்டும். யாரோ ஒருவர் செய்த செயல் எப்படி ஒரு கட்சியின் போக்கைத் தீர்மானிக்கும்?

நீதிக்கட்சி ஆட்சியில் இருந்தபோது தலித் மக்களுக்கு என்னவெல்லாம் செய்துள்ளது என்று பார்க்க வேண்டாமா?. நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்த முதல் ஆண்டிலேயே, சமூக நீதிக்கான ஆணை வெளியிடப்பட்டதே! 1921 ஆகஸ்ட் 16 ஆம் தேதி, மக்கள் தொகை அடிப்படையில் அரசுப் பணிகள் வழங்கப்பட வேண்டும் என்று ஆணியிட்டதே, அது தலித்துகளுக்கு எதிரானதா? 1922 மார்ச் 25 ஆம் தேதி, ஒடுக்கப்பட்ட மக்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப, பஞ்சமர் என்ற பெயர் நீக்கப்பட்டு, ஆதிதிராவிடர் என்று பெயரிடப்பட்டதே, அது தலித்துகளுக்கு எதிரானதா?

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனை வழங்கியது, கல்விக்கு உதவித்தொகை வழங்கியது, தனியார் பேருந்துகளில் அவர்களை ஏற்ற மறுத்தால், பேருந்துகளின் உரிமம் ரத்தாகும் என்று அறிவித்தது என்று நீதிக்கட்சியின் செயல்பாடுகளைச் சொல்லிக்கொண்டே போகலாம். அதேபோல, திமு கழக ஆட்சியிலும், செய்யப்பட்ட சமூக நீதிச் செயல்களைப் பட்டியலிடலாம். எனினும் என்ன பயன்? தூங்குகின்றவர்களைத்தான் எழுப்ப முடியும், தூங்குவது போல நடிப்பவர்களை எப்படி எழுப்புவது?

இங்கேதான், ரஞ்சித் அவர்கள் குறித்து நம்மிடம் இரண்டு ஐயங்கள் எழுகின்றன. நம் எல்லோருக்கும் பொதுவான எதிரியை விட்டுவிட்டு, சமூகநீதியைச் சாய்க்க விரும்புகின்றவர்களிடம் மென்மையாகவும், நம்மிடம் கடுமையாகவும் ஏன் அவர் நடந்து கொள்கின்றார்?

இரண்டாவது, நாட்டில் முதன்மையான செய்திகள் களத்தில் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுதுகளிலெல்லாம் ரஞ்சித் ஏன் வேறு செய்தியைத் தளத்திற்குக் கொண்டுவருகிறார்?

எடுத்துக்காட்டாகச் சிலவற்றைப் பார்க்கலாம். அனிதாவின் மரணம் பற்றி நாடே கொந்தளித்துக் குமுறிய நேரத்தில், ரஞ்சித், இயக்குனர் அமீரின் ஒலிவாங்கியைப் பறித்துப் பறித்துப் பேசினார். உடனே எல்லா ஊடகங்களும், அனிதாவை விட்டுவிட்டு, ரஞ்சித்-அமீர் மோதல் பற்றி விவாதிக்கத் தொடங்கிவிட்டன.

சென்ற தேர்தல் நேரத்தில், திமுக, விடுதலைச் சிறுத்தைகள் கூட்டணிப் பேச்சு வார்த்தை நடைபெற்றுக் கொண்டிருந்த போது, தலித் கட்சிகள் அனைத்தும் ஒருங்கிணைந்து ஏழு தொகுதிகளில் தனித்துப் போட்டியிட வேண்டும் என்றார். அது சரியா, தவறா என்ற விவாதம் கிளம்பியது.

இப்போது புதிய கல்விக் கொள்கை என்னும் பெயரில், மும்மொழிக் கொள்கையை மத்திய அரசு கொண்டுவரத் திட்டமிடுவதை முற்போக்காளர்கள் அனைவரும் கடுமையாக எதிர்த்துப் பரப்புரை செய்துகொண்டிருக்கும் நேரத்தில், ரஞ்சித் ராஜராஜ சோழன் குறித்து வெகுண்டெழுந்து பேசுகின்றார். முற்போக்காளர்களை எதிர்க்க வேண்டும் என்கிறார். இப்போது மொழிக்கொள்கை பற்றிய விவாதம் பின்னுக்குத் தள்ளப்பட்டு, ராஜராஜன் முன்னுக்கு வந்து விட்டார்.

குழப்பமாக இருக்கிறது ரஞ்சித்! நட்பு முரண் எது, பகை முரண் எது என்று புரியவிடாமல் ஏன் குழப்புகின்றீர்கள்? முதன்மையான சிக்கல்கள் வரும்போதெல்லாம், ஏன் வேறு சிக்கலைக் கொண்டுவருகின்றீர்கள்? ஆரியத்தைத் தாக்க வேண்டிய நீங்கள் ஏன் திராவிடத்தையே குறிவைத்துத் தாக்குகின்றீகள்? நம்மிடையே ஒற்றுமையை வளர்ப்பதற்கு மாறாக, ஏன் பிரிவினையை, பகைமையை வளர்க்கின்றீர்கள்?

சொல்லுங்கள் ரஞ்சித்.........நீங்கள் யார்?

# புதுவையில் பேரவைப் பொதுக்குழு









திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுக்குழுக் கூட்டம், 09.06.2019 அன்று காலை 10.30 மணி முதல் மாலை 4 மணி வரையில், புதுவை உருளையன்பேட்டையில் நடைபெற்றது. கூட்டத்தில் 132 பேர் கலந்து கொண்டனர். மாநிலப் பொறுப்பாளர்களுக்கான அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இவ்வாண்டின் இறுதிக்குள், திண்டுக்கல், சேலம், திருப்பூர் ஆகிய இடங்களை மையமாகக் கொண்டு, மூன்று மண்டல மாநாடுகள் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.
2. டிசம்பர் மாத இறுதியில், உடுமலைப்பேட்டைக்கு அருகில் உள்ள திருமூர்த்திமலையில், பேரவை உறுப்பினர்களின் குடும்ப ஒன்றுகூடல் நிகழ்வை நடத்துவதென்று தீர்மானிக்கப்பட்டது.
3. மகளிர் அணி சார்பில், முடக்கப்பட்டுக் கிடக்கும் செம்மொழி ஆய்வு நிறுவனத்தை மீண்டும் செயல்படுத்தக் கோரி ஒரு போராட்டத்தை முன்னெடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.
4. தந்தை பெரியார் பிறந்த நாளான செப்.17 முதல், பேரவையின் சார்பில், மாத இதழ் ஒன்றினை அச்சு வடிவில் வெளிக் கொண்டுவருவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

ஆசிரியர் குழு
**தமிழ்மறவன்**
**உதயகுமார்**
**வெற்றிச்செல்வன்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keetru.com**
**www.peravai.com**
**www.karunchattaibooks.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-4204 7162

# மறைவெய்தினார் சிவசுப்பிரமணியம்



அரியலூர் மாவட்டத் திமுக செயலாளர் சிவசங்கரின் தந்தையும், திமுகவின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் பெரியார் விருது பெற்றவருமான சிவசுப்பிரமணியம் உடல் நலக்குறைவால் 14-6-2019 அன்று காலமானார். இவர் ஆண்டிமடம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராகவும், மாநிலங்களவை உறுப்பினராகவும் இருந்தவர். இவரின் மறைவுக்குப் பேரவையின் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

# காலமானார் ராதாமணி



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ராதாமணி உடல்நலிவுற்ற நிலையில் 14.6.2019 அன்று காலமானார். திமுக வளர்ச்சிப் பணியில் பேரார்வம் காட்டிய இவர் கலைஞரின் பாராட்டுதலைப் பெற்றவர். அவரின் மறைவுக்குத் திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சார்பாக ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## குரங்குச் சேட்டை

குரங்கு தன் எதிரில் உள்ள ஒன்றைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமானால் தன் காலை அதற்கு நீட்டி, நீட்டி இழுத்துக் கொண்டுத் தாவும்.

இதைக் குரங்குச் சேட்டை என்பார்கள். இப்பொழுது தமிழகத்திலும் அப்படி ஒரு நிகழ்வு நடந்திருக்கிறது.

மதுரை திருமங்கலம் ரயில் நிலையம் அருகில் இரண்டு இரயில்கள் ஒரே தண்டவாளத்தில் வந்த காரணத்தினால், ரயில்வே துறை அதிகாரிகள், பணியாளர்கள் அனவரும் இந்தியில்தான் பேசவேண்டும் என்று ரயில்வே துறை அதிகாரி ஆணை பிறப்பித்தார்.

அதாவது இரண்டு ரயில் நிலைய அதிகாரிகளில் ஒருவருக்குத் தமிழும், மற்றவருக்கு இந்தியும் தெரிந்திருந்த காரணத்தினால், நேரவிருந்த விபத்துக்குக் காரணம் தமிழில் பேசியதுதான் என்பது அதிகாரி சொல்லும் காரணம். இதைச் சப்பாணிக் காரணம் என்றுதான் சொல்லவேண்டும்.

தமிழ்நாட்டில் தமிழ் தெரிந்த அதிகாரிகள்தான் பணியில் இருக்க வேண்டும். அப்போதுதான் தொடர்பு கொள்ளவும், கருத்துப் பரிமாறவும் எந்த ஊறும் இருக்காது.

அதை விட்டுவிட்டு வடநாட்டு இந்திக்காரர்களை பணியில் அமர்த்தி, அவர்களுக்குப் புரியவேண்டும் என்பதற்காக இங்குள்ள தமிழதிகாரிகள், பணியாளர்கள் அனைவரும் இந்தியில்தான் பேசவேண்டும் என்றும், அவர்களின் தாய் மொழியில் பேசக்கூடாது என்றும் சொல்வது எந்த வகையில் நியாயம்?

தி.மு. கழகத்தலைவர் தளபதி ஸ்டாலின் எடுத்த அவசர நடவடிக்கையால், அதிகாரிகள் பின்வாங்கி விட்டனர்.

இதைத்தான் குரங்குச் சேட்டை என்று சொல்வார்கள்.

தமிழகத்தில் எப்படியும் இந்தியை நுழைத்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் விளைந்த மத்திய பாஜகவின் 'நோட்டமிடும்' செயல்பாடுகளில் இதுவும் ஒன்று.

முன்னாள் பிரதமர் ஜவகர்லால் நேரு, இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை அவர்கள் மீது இந்தி திணிக்கப்பட மாட்டாது என்று உறுதி அளித்திருந்தார்.

இன்று அந்த உறுதி மீறப்பட்டுள்ளது.

ஆர்.எஸ்.எஸ்சின் பாஜக மத்திய அரசின் மும்மொழித் திட்டம் இல்லை என்று அறிவிக்கும்வரை தமிழக மக்கள் மிக மிக எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என்பதை இது உணர்த்துகிறது.

பேரறிஞர் அண்ணாவின் இருமொழிக் கொள்கை ஒன்றைத்தவிர வேறு எதையும் தமிழ்நாடு ஏற்றுக் கொள்ளாது.

இதை மத்திய மோடி அரசு புரிந்து கோள்ளவேண்டும்.

# தேசியக் கல்விக் கொள்கை

# குழந்தைகள் மீது நிகழ்த்தப்படும் வன்முறை

## -பிரின்ஸ் கஜேந்திர பாபுவிடம் ஒரு நேர்காணல்



**தேசிய கல்விக் கொள்கை - 2019 வெளியிடப்பட்டது பற்றி...**

சென்ற ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட டி.எஸ். ஆர் சுப்ரமணியன் குழுவின் தொடர்ச்சியாகவே இப்போது வெளியிடப்பட்டிருக்கும் கஸ்தூரி ரங்கன் குழு வகுத்திருக்கும் கல்விக் கொள்கையைப் பார்க்க வேண்டியிருக்கிறது. 2018 டிசம்பரில் அரசிடம் அளிக்கப்பட்ட இந்த வரைவு இந்த ஆறு மாதங்களில் எந்த மொழியிலும் மொழிபெயர்க்கப்படாமல் ஹிந்தி மற்றும் ஆங்கிலம் என இரு மொழிகளில் மட்டுமே வெளியிடப்பட்டிருக்கிறது. ஹிந்தி அல்லது ஆங்கிலம் தெரியாதவர்கள் இதன் மீது கருத்து சொல்லக்கூடாது என்று இந்த அரசு நினைக்கிறதா? அதிலும் ஒரு மாத காலத்திற்குள் எப்படிக் கருத்துச் சொல்ல முடியும்? குறைந்தபட்சமாக அட்டவணை 8 இல் இருக்கும் 22 மொழிகளில் மொழிபெயர்க்க வேண்டும். கால அவகாசத்தை 6 மாதங்களாக அதிகரிக்க வேண்டும்.

**3. மும்மொழிக் கொள்கையைத் தாண்டி இக்கல்விக் கொள்கையில் இருக்கும் அபாயங்கள் என்னென்ன?**

ஒரு அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்த இவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள். இவர்கள் 3 வயதிலிருந்தே முறைப்படியான கல்வி என்று ஆரம்பிக்கிறார்கள். இது நியாயமற்ற அணுகுமுறை. L.K.G தொடங்கி மூன்றாம் வகுப்பு வரை அடிப்படைக் கல்வி என்று சொல்கிறார்கள். இந்த அடிப்படைக் கல்வி முடிந்த பிறகு ஒரு தேர்வு. அதற்குப் பிறகு 5 ஆம் வகுப்பில் ஒரு தேர்வு, 8 ஆம் வகுப்பில் ஒரு தேர்வு என்கிறார்கள். இப்படிப்பட்ட தேர்வுகள் என்பது குழந்தைகளின் மீதான வன்முறை. ஒன்பதாம் வகுப்பிற்குப் பிறகு பன்னிரண்டாம் வகுப்பு வரை 8 பருவத் தேர்வுகள். இதை இடைநிலைக் கல்வி என்று மாற்றுகிறார்கள். இந்த கல்வி முறை தான் மாணவர்களின் சிந்தனைத் திறன் வளர்ச்சிக்கு உதவும் என்று சொல்லிவிட்டு, பள்ளிக் கல்வி என்பது கல்லூரியில் சேர்வதற்கான தகுதி இல்லை என்று சொல்கிறார்கள். கல்லூரியில் சேரவேண்டும் என்றால் தேசியத் தேர்வு முகமை(NTA) நடத்தும் திறனறியும் தேர்வு எழுதி அந்த மதிப்பெண்ணின் அடிப்படையிலே கல்லூரியில் இடம் அளிக்கப்படும். சிந்தனைத் திறனோடு மாணவர்களை வளர்க்கும் கல்விக் கொள்கை என்று அவர்களே சொல்லும் பட்சத்தில் மாணவர்கள் ஏன் அதன் அடிப்படையில் கல்லூரிகளில் சேர்க்கப்படக்கூடாது? எதற்காக இன்னொரு திறனறியும் தேர்வு? இவர்களுடைய நோக்கமெல்லாம் மூன்றாம் வகுப்பு தொடங்கி தொடர்ந்து மாணவர்களை வடிகட்டுவது. பள்ளிக் கல்வியின் போதே தொழிற்கல்வியைப் பயிலச் சொல்கிறார்கள். கல்லூரியில் அனைத்துத் தரப்பினரும் சேருவதைத் தடுக்கவே இந்த ஏற்பாடுகள்.

இதே போல் போதுமான கட்டுமான வசதிகள் இல்லாத அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்களோடு இணைத்துவிடுவது. பட்டப் படிப்புக்கான காலத்தை 4 ஆண்டுகளாக மாற்றியிருப்பது என கல்வியைச் சீர்குலைக்கும் நோக்கோடு இக்கல்விக் கொள்கை அமைந்திருக்கிறது.

**4. பாடத்திட்டங்கள், பாடநூல்கள் இவை பற்றி இந்தக் கல்விக் கொள்கை என்ன சொல்லியிருக்கிறது?**

பாட நூலைப் பொறுத்த வரையில் தேசிய அளவில் ஒரு பாட நூலை உருவாக்கிக் கொடுத்துவிடுவார்கள். மாநிலங்கள் வேண்டுமென்றால் கூடுதலாக சிலவற்றைச் சேர்த்துக்கொள்ளலாம். மாநிலங்கள் கல்விக் கொள்கைகளை உருவாக்குதல், பாட நூல்களை உருவாக்குதல் என எல்லா உரிமைகளும் போய், ஒற்றை இந்தியா, ஒற்றைக் கல்வி, ஒற்றைப் பாடநூல், ஒற்றைத் தேர்வு என உருவாக்குவதே இந்தக் கல்விக் கொள்கை. இது கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது. இந்தியா போன்ற பரந்துபட்ட பன்மைத்துவம் கொண்ட நாட்டில் மொழி அழிப்பை, பண்பாட்டு அடையாள அழிப்பைத்தான் இது ஏற்படுத்தும்.

**5. சமஸ்கிருதத்திற்கு இதில் எவ்வள்வு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது?**

சமஸ்கிருதத்திற்கு அவர்கள் கொடுக்கும் முக்கியத்துவம் என்பது இந்த கல்விக் கொள்கையில் மிகவும் அதிகமாக இருக்கிறது. இந்தியாவினுடைய மொழி வளர்சிக்கும், பன்முக ஒருமைப்பாட்டிற்கும் அளப்பறிய பங்களிப்பு செய்திருக்கிறது என்று சொல்கிறார்கள். இது ஏற்கத் தகாத வாதம். வெவ்வேறு மொழிக் குடும்பங்களைச் சார்ந்த மொழிகள் இருக்கும் நாட்டில், சமஸ்கிருதம் எப்படி எல்லா மொழிகளையும் வளர்ப்பதற்குப் பங்களிப்புச் செய்திருக்க முடியும். பள்ளிக்கல்வி தொடங்கி கல்லூரி வரைக்கும் சமஸ்கிருதத்தைச் சிறப்பாகப் பயிற்றுவிக்க அனைத்து வாய்ப்புகளையும் ஏற்படுத்த வேண்டும் என்று சொல்கிறார்கள். இது இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 14 க்கு எதிரானது. எப்படி ஒரு மொழிக்கு மட்டும் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்க முடியும்? மற்ற மொழிகளை அழித்து சமஸ்கிருததை இந்தியாவின் பண்பாட்டு அடையாளமாக மாற்றுவது, எல்லோரையும் ஹிந்தி பேசச் செய்வது போன்றவற்றை இந்தக் கல்விக் கொள்கை உள்ளடக்கியிருக்கிறது.

**7. சமூக நீதி எந்த அளவிற்குப் பாதிக்கப்படும்?**

இக் கல்விக் கொள்கை சமூக நீதிக்கு எதிரானது. இட ஒதுக்கீடு பற்றி எதுவுமே சொல்லப்படவில்லை. கல்வியியல் கல்லூரி பற்றி பேசும்போது மட்டுமே இடஒதுக்கீடு பற்றி சொல்கிறார்கள். மற்ற எல்லா இடங்களிலும் “தகுதி”(Merit) பற்றியே பேசியிருக்கிறார்கள். அந்தந்த மாநிலங்களில் கடைபிடிக்கப்படும் இடஒதுக்கீட்டுக் கொள்கைகள் தொடரும் என்று எந்த உத்தரவாதத்தையும் இந்தக் கல்விக் கொள்கை தரவில்லை.

**8. ஒட்டு மொத்தமாக இந்தக் கல்விக் கொள்கையை நாம் எப்படிப் பார்ப்பது?**

உலக வர்த்தக ஒப்பந்தத்தில் பொதுச் சேவையின் கீழ் கையெழுத்தான ஆவணத்தின் சரத்துகளுக்கு ஏற்ப இந்தக் கல்விக் கொள்கை அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பார்வையில் இந்தக் கல்விக் கொள்கை இல்லை. சந்தைப் படுத்தும் பார்வையில் தான் இந்தக் கொள்கை வகுக்கப்பட்டிருக்கிறது.

நேர்காணல் **மா.உதயகுமார்**

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secretary, Dravida Iyyakka Tamilar Peravai.